# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 99/2004

Deposition of **PW.3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 25.10.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : கிருஷ்ணராஜ் Father's Name : கோபால்

துவக்க நேரம்: 01.13 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. 1-ம் வாதி என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வாதியின் அனுபவத்தை பிரதிவாதி இடையூறு செய்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார். எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் பாதி மெய்யப்பகவுண்டருக்கும் மறு பாதி பொன்னுசாமி கவுண்டருக்கும் பாத்தியப்பட்டது என கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் மேற்படி இருவருக்கும் பாத்தியப்பட்ட நிலங்கள் சம விஸ்தீரணம் கொண்டவை என கூறியுள்ள நிலையில் எந்தெந்த சர்வே எண்களில், எவ்வளவு நிலம் உள்ளது என கூறமுடியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. கிருஷ்ணசாமி என்பவர் தான் பொன்னுசாமிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தை யார் மனு தாக்கல் செய்து நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் இருதரப்பினரும் சேர்ந்து அளந்து கல் போட்டார்கள். அவ்வாறு எந்த தேதியில் அளவீடு செய்தார்கள் என்றால் தேதி தெரியாது, ஆனால் சுமார் கடந்த 20

வருடங்களுக்கு முன்பு அளந்தார்கள். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே நிலத்தை அளந்துவிட்டார்களா என்றால் ஆமாம், அவர்களுக்குள் அளந்து கல் நட்ட பிறகும், பிரச்சினை ஏற்பட்டதால் வழக்கு தாக்கல் செய்தார்கள்.

3. தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் 4-ம் பிரதிவாதி கூறியதன்பேரில் தயார் செய்யப்பட்டது என்றாலும் அதில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல. 1-ம் வாதி இறந்தபின்னிட்டு தற்பொழுது எந்தெந்த சர்வே எண்கள் உள்ள இடத்திற்காக இந்த வழக்கு நடைபெற்று வருகிறது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

முடிவு நேரம்: 01.27 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.99/2004, Dt.25.10.2025.